[திரு. ம. சின்னசாமி] [1993 மார்ச் 16

(6) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1987-88 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் பொதுப் பணித் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த இருபத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துறைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை.

(7) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த முப்பத்து மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை.

(ஆ) சட்டவிதிகள் ஆய்வுக்குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் 1992-93 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

5. சட்டமுன்வடிவுகள்-அறிமுகம் செய்தல்.

சட்டமன்றம் தொடர்பான (தகுதியிழத்தல் தடுப்புத்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்). 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் தொடர்பான (தகுதியிழத்தல் தடுப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.

*** மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் தொடர்பான (தகுதியிழத்தல் தடுப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.